807



A. M. D. G.

# பேரின்ப ஞானக் கீர்த்தனை.

இஃது

குண்டுகுளம் R. C. ஸ்கூல் உபாத்தியாயர்
யா, ச. மரிய சூசை பிள்ளையால்
பாடப்பெற்றது.



திருச்சினாப்பள்ளி
திரு இருதயத்தூதன் பத்திராதிபரும்,
சேசு சபைக் குருக்களிலொருவருமாகிய
இராஜரிஷி சங். J. ஆனந்து சுவாமியவர்களால்
பார்வையிடப்பட்டு

---

சரிவந்திக்கத்தக்க
அகுஸ்தீன் பெசாந்தியார் ஆண்டவரவர்களின்
அங்கீகாரமும் பெற்றது

---

பரமக்குடி
ஸ்ரீ முருகானந்தன் பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றது.
1934

Ol:417
N34.
172400

# முகவுரை.

ஐயன்மீர்!

நம் கத்தோலிக்குக் கிறிஸ்துவ சமூகத்தவர்கள் பலர் மற்ற இந்து மதஸ்தாரிடையில் அவரவர்களுடைய பழக்க வழக்கங்களில் சிலவற்றை இன்று வரை கைவிடாது விசேஷமாய் கீர்த்தனை, நாடகம் முதலியவற்றில் இரு பாலர்க்கும் வித்தியாசமின்றி ஜீவிப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே.

மேலும், 'நாடித் தொழுவதிலும் பாடித் தொழுவது நலம்' என்று தாவீது இராஜா பாடிய பிரகாரம் கீர்த்தனை மூலம் சர்வேஸ்பரனைத் துதிப்பது நலமெனக் கருதி சங்: சந்தியாகு சுவாமியவர்கள் போன்ற பெரியார் பலரால் தேவ தோஸ்திரக் கீர்த்தனை, ஞானக் கீர்த்தனை போன்ற பல கீர்த்தனைகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால் இக்காலத்தில் புதிய கிராமபோன் பிளேட் இராகத்தில் இந்து சகோதரர்கள் பலரால் வெளியிடப்பட்டுள்ள சிற்றின்பம் மலிந்த பாடல்களை வாங்கி பஜனை நாடகத்தில் பாடி தாங்கள் கெட்டழிவது மன்றி ஏனையோர்களையும் கெடுத்து வருகிறார்கள்.

இவ்விதக் குறைவை நிறைவாக்க வேண்டி மேற்படி இராகத்தில் இந்த பேரின்ப ஞானக் கீர்த்தனை யென்ற இச்சிறு புத்தகத்தை வெளியிட முன் வந்துள்ளேன்.

ஆகையால் நம் கிறிஸ்துவத் தமிழுலகம் என்னையும் இச்சிறு புத்தகத்தையும் ஆதரிக்க வேணுமென்பதாய் மிகவும் விநயமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

யா. ச. மரியகூசை.

Nihil obstat: T Ananthu S. J.
Ceus Dep.

Imprimatur

† Augustinus S J.
Epise Trichinopolit.

சேசுமரி சூசை துணை.

# பேரின்ப ஞானக் கீர்த்தனை.

## வெண்பா

எந்தை சர்வேசா இரக்கம் நிறை கர்த்தாவே
உந்தனருளால் ஓதினேன் கீர்த்தனையை—இத்தரையில்
பைந்தமிழ்க்குதவி செய்
பாதமலர் தான் காப்பு.

## சபை வணக்கம்

No. 1 இராகம்—திருப்புகழ்

தனனதனத்த தனனதனத்த
தனனதனத்த—தனதான

1 மாறா வரமே நேராயடைந்த
மங்காத செல்வ மரியே
சீராய்ச் சிறியேன் கூறுந்தமிழ்க்குன்
ஆசீர் தருவாய் ததியே.

2 கலையால் நிறைந்து கவியால் சிறந்து
கன மேன்மை தங்கும் பெரியோரே
கழறும் சிறியேன் கவியின் வடுவைக்
களைவீர் அரும் புலவோரே.

5 பேரின்ப ஞானக் கீர்த்தனையென்ற
பெயரைப் புனைந்த கவியை
கோரினேன் எந்தன் குறும் புத்தியாலே
குற்றம் பொறுப்பீர் பெரியோரே.

---

## சேசுநாதர் பேரில்

No. 2 இராகம் இந்துஸ்தான் காபி—தாளம் ஆதி
(கந்தா காருண்யனே— என்ற மெட்டு)

பல்லவி

சேசு நாயகனே ஜெக ரெக்ஷகனே

அநுபல்லவி

மாசில்லாதவனே மன்றாடினேன் நானே சேசு

சரணம்

மானிலத்தோர் பாவ வினை மாற்றவந்த மூலனே
மண்ணில் மூன்று தினம் மறைந்த வேதனே
விண்ணில் பிதாவின்வலம் விளங்குங்கீதனே சேசு

தொகையறு

சேவைதா சேசென்னும் ராஜனே
மாசில்லா மாமரி மைந்தனே
காவில் வினைபுரி ஏவையை மீட்ட
கர்த்தனே பரி சுத்தனே சேசு

சரணம் தொடர்ச்சி

மரித்த லாசரையே மண்ணிலெழுப்பினீர்
மகனை யிழந்த பெண்ணின் மன்றாட்டுக்கிரங்கினீர்
மன்றாடும் மரியசூசை மாதமிழ்க்கிரங்குந்தேவா சேசு

---

No. 3 இராகம் இந்துஸ்தான் காபி — தாளம் ஆதி

(தாயிடத்திலன்பில்லாத— என்ற மெட்டு)

பல்லவி

ஆண்டருள் ஞான தேசிகா அடிமலர் போற்றி ஆ

அநுபல்லவி

அடிமலர் போற்றி எம் மிடியதையகற்றி ஆ

சரணம்

1 மூண்ட பழம்பழியால் நீண்ட சிலுவை தன்னில்
மாண்டு வினையைத்தீர்த்த மாபரன் நீரே
மாபரன் நீரே நின் மைந்தரைக்காரே ஆ

2 தேகமதை அப்பமென்றும் சிறந்தரசமானதென்றும்
தாகமுடன் எமக்களித்த தர்மத்தியாகனே
தர்மத்தியாகனே தலை சிறந்த யோகனே ஆ

3 தேவபிதா வலமமர்ந்து சேயருக்காய்த் தினம்மன்றாடும்
பூவுலகை மீட்கவந்த புண்ணிய நேசா
புண்ணிய நேசா நரர் புகழும் விஸ்வாசா ஆ

4 தேவுலக வாசிகளும் திரள் திரளாகக்கூடி
ஆவலுடன் சேவைசெய்யும் அதிபதி நீரே
அதிபதி நீரே அகில மகிபதி நீரே ஆ

5 பூவுலகோர்க்காய்ப் பிறந்து பொன்மேனியைத் தானீந்து
பாவவினை நீக்கிவைத்த பரம வாக்கியா
பரம வாக்கியா பரிசுத்த யோக்கியா ஆ

6 மாமரியாளின் சுதனே மரியசூசையின் கீதனே
கேமமுடன் தமிழ்க்குதவ நேரில்வா யேகா
நேரில்வா யேகா யேசு நிர்மல யோகா ஆ

NO. 4 இராகம் கல்யாணி தாளம் ரூபகம்

(சோம சுந்தரனே— என்ற மெட்டு)

பல்லவி

சேசு நாயகனே நின்
சேவை தந்து காராய் ததி சேசு

அநுபல்லவி

1 சேய மெமக்காக அன்று ஜெனித்தீர் மரியாள்பால்நின்று
மாயப்பேய் வலையை வென்று
மாக்களெமைக் கார்த்தாளின்று சேசு

2 வஞ்சகவுடலை நம்பி வாடினேனே பூவில் வெம்பி
தஞ்சமாய் நின் தாளை நம்பி—
தாசன் வந்தேன் நேசம் வைத்தாள் சேசு

3 தேவுலகோர் போற்றுஞ்சிங்கம் திருமரிவாளீன்ற தங்கம்
ஆவி சோருதே என்னங்கம்—
ஆருமில்லை பாரென் தொல்லை சேசு

4 மைந்தனும் மரியசூசை மன்றாட்டுக்கிரங்கும் வாச
தண்டமிழ்க்குகந்த நேச—
தாளை யீய வேளை வாரும் சேசு

---

NO. 5 இராகம் தேசிகம் கபாஸ் தாளம் ஆதி

(காக்ஷி கண்காக்ஷியே—என்ற மெட்டு)

பல்லவி

ஐயனே அருள் தாருமே கிறீஸ்து ஐயனே

அநுபல்லவி

அருணோதயக் கருணாகரத் திருமாமரி கருவாகிய ஐய

சரணம்

1 அம்புவியை யோர் நொடியிலமைத்த கிருபாகனே
ஆதரையோர்கள்பணி அலங்கிர்தத்தியாகனே
ஆவினங்குடியில்வந்த ஆதரையின் மீட்பனே
அண்டினேன் பதம் தொண்டனுன்சதம்
அறவோர்தினம் திரமாகவே கரமேகுவித்தடி பணியும் ஐய

2 ஆதரையிலென்வினை யளவிடக்கூடாதையா
ஆறுதலெனக்களிக்க யாராலுங்கூடாதையா
ஆனாலுஏழைஎந்தனை யாண்டருளுஞ்சேசையா
அடியோர் பாவமே அடைந்தீர் மரணமே
அமலா சர்வ விமலா மலர்க்கமலா அருள்திலகனான ஐய

3 தஞ்சமென்றேயுன்பாதத்தைத்தாவினேன்என்சுவாமியே
தாபரிப்பதுன்றன்பாரம் என்றோதினேன் நேமியே
வஞ்சகனும் நஞ்சராவின் தலையறுக்கும் வாமியே
வாடினேன் நாளும் முறை பாடினேன் கேளும்
வரமேதரும் பரமா திருக்குருவே மலர்த் தருவாகிய ஐய

4 காரிருளில் வெள்ளைமலை கற்குகையில் வந்தவா
காரணமாய் மூவுலகில் பூரணமமைந்தவா
கோரினேன் பரியகுணை நேரில்வந்தருள் பரா
கொண்டாடிப்பாதம் மன்றாடி நீதம்
கொஞ்சிப்பதம் கெஞ்சிமனதஞ்சி வந்தேன் தஞ்சம்தரும் ஐய

---

No. 6 இராகம் சுதனுகுதூகலா தாளம் ஆதி

(ரெகுவம்ச சுதா—என்ற மெட்டு)

பல்லவி

அருளே பொழி ஐந்து காயனே
அன்பனே சுநாதா அன்னைமரி சுதா அரு

அநுபல்லவி

கருணாகரா கதி தா உதாரா
கஞ்சமலர்ப் பாதம் கவிந்தேனே சிரம் ததி அரு

சரணம்

சேவை தாருங்கோனே சிறியேனும் நானே
வந்தனே செய்வேனே மைந்தன் நம்பினேனே
மரியசூசை சதா
மன்றாடும் பாதா
மங்களேஸ்டரா மாதவன் குமாரா
பலரடி தந்தடி யென்னை யாதரி
மதுரித மாமலர் திருநிறை வானவர் கரமது குவித்திடும்
கருணைப்பதனைததி சிறியேனின் வினைதீர அரு

---

No. 7 இராகம் (செந்தூர் வேலாண்டி — என்ற மெட்டு)

பல்லவி

எந்தை சர்வேசா எமக்கிரங்கிடும் எந்
ஏசுக்கிறீஸ்து ராஜா எமக்கிரங்கும் எந்

அநுபல்லவி

செந்தாமறைப் பாதனே
செகத்தின் மீட்பனே
சித்தமிரங்கியே பித்தரடியோரை
உத்தம பாதையில் நித்தம் நடத்தும் என் எந்

மகுடங்கள்

பரம திருமரி அரிய கருவதில்
உருவாகியே என் பரம சேசுவெனும் எந்
படைத்து நரகினை அடைத்துச்சிறைதனில்
உடைத்து நரசெமை விடுத்த பரமனே எந்

சரணம்

அத்தை பரமநாதன் எளியோரை மீட்டவேந்தன்
இணையடி மறவாது அநுதினம் துதிபுரி
எளியேன் மரியசூசை தமிழ்க்குன் வரமருள் — எந்

No. 8 இராகம் சகானு தாளம் ஆதி

(ஐயா பழனி மலை வேலா— என்ற மெட்டு)

1 ஏசு நாதா கிருபை செய்யும் யிவ்வேளை ஏழை
நாடி வந்தேனின் தாளை
தாசர் சுகிக்கு மின்பப் பேழை இத்
தருணம் தந்தருள் நின் தாளை ஏசு

2 வண்டன் லூசி சிரத்தைத் தானே அன்று
வன்னாகில் சிதைத்த கோனே
எண்டிசையும் புகழுந் தேனே மலர்
தூற்றிப்பணிந்தேன் ததி நானே ஏசு

3 அக்ரமிகளாம் பிலிஸ்தேயர் அன்று
அழிந்திடச் சாபமது புகன்றீர்
நிக்ரகமே புரிந்தேன் கோனே எனது
நீசத்தனத்தைத்தகி நானே ஏசு

4 பந்தபாசத்தின் வினையாலே நான்
பரதவிக்கின்றேன்புவி மேலே
சொந்தமென்றே யுனது தாளே மரிய
சூசை துதித்தேன் தமிழாலே ஏசு

---

No. 9 இராகம் உசேனி தாளம் ஆதி

(எட்டுக்குடி வேலனடி—என்ற மெட்டு)

கண்ணிகள்

1, ஒப்பிடங்காத் தெய்வீகஞானம் உறையும் மெய்யான தேவன்
சற்பிரசாதந்தன்னில் மனுவோருக்காய்
தகனபலியாய் வந்தார்.

2. அப்பமதிலே மறைந்து அவனிதனைப் புரந்து
எப்போதும் எமக்காகவே பிதாவின் வலம்
இருந்து மன்றாடும் பரன்.

3. திரித்துவயேக சுதன் தேடினோரையாளுந் தியாகன்
மரித்த மூன்றாம் தினம் மங்களமாக
மண்ணினுயிர்த்த சீலன்.

4. வல்லமையாய் மூவுலகை வகுத்த பரமனவர்
வெள்ளை மலையதனில் பாலனாக
விரும்பியே வந்த தீரன்.

5. மைந்தன் மரியசூசை மன்றாட்டுக்கிரங்கியே
சிந்தை தனிலுறைந்து என்றாளுமுந்தன்
சேவை தந்தாளும் பரன்.

---

No. 10 இராகம் (தயவில்லாததேன் வஞ்சம்-என்ற மெட்டு

பல்லவி

கிருபையில்லாததேனோ நாதா ஏசுக்
கிறீஸ்துவெனும் நேசதாதா சற்று கிரு

அநுபல்லவி

மாமரியாள் பயின்ற சுதனே மனக்
கவலை தீரவே மைந்தர் மீதிலே
மனக்கனிவுடனிரங்கி வந்தருள் செய கிரு

சரணம்

கதியுனை யன்றி வேறு காப்பவர் யாரு
காரணனே வழி காணேனே வேறு
வாதனை செய்திடலாமா —— புகழ்
வழங்கினேன் துதி முழங்கிடும் பதி
துலங்கும் சூராணம் விளங்கு ராஜனே கிரு

No. 11 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி

(மகம்மதியர் குலத்தில்—என்ற மெட்டு)

1 மூவுலகந்தன்னையே ஆவலுடனமைத்து
மூத்தொழில்கொண்ட தற்பரா—உனைப்பணிந்தேன்
சத்துவர்போற்றுங் கெம்பீரா

மூத்தர்கள் போற்றிடும் தத்துவ போதகா
நித்தமுனதடி நத்திடும் பாவியை
நாடிக்கார்த்தருளும் நாதனே—ஏழையடியேன்
பாடிப்பணிந்தேன் வேதனே மூவுல

2 ஆதாம் யேவாளுடனே அவர்கள் சந்ததியார்கள்
அன்பாய்த் துதிக்கும் தேவனே—அருள் வேதனே
அன்பர் மகிழுந்தாபனே

அடவியின் மிடியதைத் திடமுடன் விலகிட
கடியதின் சிரமதை யடியோடு பொடிபட
அன்னை மரியாளின்பாலே குழந்தையாக
அவதரித்தாயே அன்பாலே மூவுல

3 சம்சோன் சாலமோனென்ற சர்வஞானிகள் மகிழ்
சற்பிரசாத நாதனே——சாவை வென்ற
கற்பலங்கார வேதனே

சகல மனுவோர்களும் புகழும் பரமனேவுன்
மகிமையுரைத்திட மிகவுமினிக்குமே
சாமியுன்னுசீர் தாருமே தஞ்சம் புகுந்தேன்
சாற்றுங்குறையைத் தீருமே மூவுல

4 பூவோர்க்காகவே சொந்த ஜீவன் தன்னையே தந்த
பொன்னகர் யூத சிங்கமே——குறைவில்லாத
தன்னிகரில்லாத்துங்கமே

பொ்றுமையது பெறவே சிறியேனுமதுபதக்
கருணையடிமலரை அருமையுடன் பிடித்தேன்
பாதுகார்த்தாளும் நாதனே மரியசூசை
பாடுந்தமிழின் கீதனே.

No. 12 இராகம் ஆனந்தபைரவி தாளம் ஆதி

(மகாதலமும் அதோ தெரியுது—என்ற மெட்டு)

பல்லவி

மகா மகிமை சதா ஜொலிக்குது மோக்ஷமன்ன
வாக என்னாளுமமரேசு நாதா மகா

அநுபல்லவி

சதா உன்னருள்மழை பொழியவே மகா

சரணம்

1 அண்டமேழைத் தொண்டனுமை நாடி முறை
விண்டேன் பதம் தெண்டமாகத்தேடி
உயர்ந்த மண்ட லேஸ்வரி கருவதில்
இசைந்த பூமண்டல மதில் எழுந்த நல் மகா

2 மூவாளொன்ருக கோரயமைக்திடும் முப்பொருளே
மூதல்வா வரமருள் ததி (மூவா)
மங்கள பதியென யெங்கும் முழங்கிடும்
துங்காவுனதருள் யெங்கும் விளங்கிடும்
தொட்டேன் பதமலர் விட்டேன் பவவினை
கட்டோடறுபட நற்றயை புரி ததி மகா

No 13 இராகம் பாரினிலே புகழ் பாரத புத்திரரே—மெட்டு

பல்லவி

எத்திசையும் புகழ் சத்தியமற்ற வீரரே
ஏசுபக்த மித்திரரே.

அநுபல்லவி

உத்தமனும் யேசு ஓதியதைப் பாரும்
உன்னைப்போல் பிறனை எண்ணித்தயை கூறும் எத்

தொகையரு

ஏகனும் பரமதேவன் பிசாரயேர் தமக்களித்த
யீரைந்து கற்பனை தன்னில் எல்லாத்திலும் பரனை
இணையடி பிரியாது ஏத்தித்தொழுவதே
ஒற்றிரண்டாவதாம் தன்னைப்போல் பிறனைத்
தாரணியில் நேசித்தோர் தப்பாதின்புறுவார்
என்றுமே

பல்லவியெடுப்பு

பாதகனும் லூசி பாதகத் தந்திரமே வெல்ல
பரமண்டல மந்திரமே
பக்தர்களோதிட சத்தியம் வாழ்ந்திட
சித்தர் புகழ்ந்திட நற்றமிழ் பாடிட எத்

---

No. 14 இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி
(இந்து நேசரே— என்ற மெட்டு)

பல்லவி

பரம தேவனே கண்
பாருங்கோமானே எங்கள் பரம

அநுபல்லவி

1 பரம பிதாவின் வலம் பாங்காகவே யமர்ந்து
கரமதை நீட்டியெமைக் கருணையுடனோக்கி நிற்கும் பர

2 ஆகாம் யேவாள் மோயீசன், ஆபிரகாம் பிதாப்பிதாக்கள்
ஆவலுடன் தேடிய நல் அலங்கிர்த யோகனென்னும் பர

3 வெள்ளி மலையதனில் புல்லணை மீதினிலே
எல்லோனைப் போலெழுந்த ஏக பரஞ்சோதியென்னும் பர

4 ஆறைய்ந்து வயது வரை அன்பாய்த் தாய்தந்தையற்கு
மாறுக்குற்றேவல் புரி மங்காத இங்கிர்தனே பர

5 பூவோர் பாவவினைக்காய் பூங்காவில் குருதி வேர்வை
தாங்கியே துயரம் பூண்ட தற்பரனுமேசுவென்னும் பர

6 மூர்க்கரடித்ததுவும் முள்முடி சூட்டியதும்
கல்வாரிக்கே சிலுவை கஷ்டமுடனே சுமந்த பர

7 தீர்க்கருரைத்த மொழி செவ்வையாயீடேற்றி
மார்க்கமதைத் திறந்து காட்ட வந்த குருபரனே பர

8 தேவ பிதாவின் மகனே திரு மரியாளின் சுதனே
பாவலன் மரியசூசை பண்மலர்ச் சூடும் பாதனே பர

---

No. 15 இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஆதி

(தசரத ராஜ குமாரா — என்ற மெட்டு)

பல்லவி

உலகரெக்ஷண்ய னேசு நாதா
மலர்ப்பாதா அருள் வேதா அலங்கிர்தா உல

அநுபல்லவி

திலகமென விளங்கும் திரு மறை வாக்கியம்
தேடியளித்த கரு ணாகர யோக்கியம்

கலக வினை தவிர்த்துன் கதிதரும் பாக்கியம்
கருத்தினி லுணர்ந்து வந்தேன் பாதம்
அருள்போதம் நவகீதம் நவில் நீதம் உல

சரணம்

ஏவை செய் வினையினால் இடரடைந்தோமே
இப்பிரபஞ்சமதாலலைந்து நொந்தோமே
பாவியுமதுமல ரடி பணிந்தோமே
பாலரெமக்கிரங்கி வாரும் அருள் தாரும்
ஆசை தீரும் எமைக்காரும் உல
மோக்ஷதெரிசனம் என்று காண்பேனோ
முடிவில்லாக் காலமதைச் சுகித்திடத்தானே
கடாக்ஷம் வையும் மரிய சூசை பணி கோனே
கன்னி மரியாள் தந்த பாலா மனுவேலா
அநுகூலா அருள் சீலா

---

No. 16 இராகம் கல்யாணி தாளம் ஆதி
(பாலாபிஷேகா தூலா—என்ற மெட்டு)

பல்லவி

மாமனுவேலா சீலா மங்கள லோலா மா

அநுபல்லவி

பானுடை மரிகுமாரா பாதகவாசி சம்மாரா
சேனுலகதிகாரா சேயர்க்காதாரா தேவ
திருமறையனுதினம் முறைமுறையாய்ப்பணி மா

1 திரிபுவி தன்னையாண்டாய் திரித்துவமாக்ஷி கொண்டாய்
காவின் வினையை வென்றாய் கருணாகரனாக நின்றாய்—பதம்
கருதியே வுனைத்தினம் மருவிடும் எனையாளாய் மா

2 மாபழிதன்னைத் தீர்த்தாய் மனுகுலத்தைக்கண்பார்த்தாய்
எமக்குன்னுசீரைவார்த்தாய் எளியோரைக் கண்ணூர்த்தாய்
உந்தன்—இருகரம் விரித்தென்னை யரவணைத்தருள்திரு மா

3 மங்காதுவாழ் கெம்பீரா மரியசூசை பணி சிங்காரா
துங்கன் றவீது குமாரா துதிக்குமெனக்காதாரா—நாளும்
துதிபுரியடியேனைப் பதமதில் சேரத்தருள் மா

---

No. 17 இராகம் திருப்புகழ்

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த—தனதான.

1 பண்டு விண்டு யிண்டு மூண்டுவுண்டு வண்டு
கொண்டுவந்த மண்டலீகனுன எந்தன் செகதீசா—உந்தன்
தண்டமுல் பதமலரைக் கண்டு தெண்டணம் புரிய
வண்டர்க்கருள் தந்தருளும் பவ நாசா பண்

2 சங்கமங்க பங்கதங்க துங்கவங்க திங்களணி
மங்கள மரிபயின்ற சேயனே—உந்தன்
பங்கமில்லாச் செங்கமல தங்கபொற்புதமலரை
எங்களுக்களித்தருள்வாய் தூயனே பண்

3 தத்திமித்தி,மித்தியென மத்தள முழங்கித்தினம்
சத்தியமறைபுகளும் வேதனே—நாளும்
பத்தியுடனின் பதத்தை முத்திகொள் மரியசூசை.
நித்தியந் துதிக்கவருள் நாதனே பண்

No. 18 இராகம் செந்தூர்வளர் முருகநாதா—என்றமெட்டு

கண்ணிகள்

1 அண்டபுவனம் நிறைந்தோனே மரியசூசை
அண்டிப் புணியும்பதத்தானே இந்த
ஆதரை தனிலுமைமெய சாதகமெனவடைந்தேன்
அன்பாய் மனமிரங்கித்தானே உமது கா
ஆசீர் தந்தாளுந் தேவனே.

2 வஞ்சகப்பேயால் மனம் வாடி உமது பாதம்
செஞ்சரணமெனவே தேடி இதோ
நெஞ்சமிகவே பதறி அஞ்சலி செய்தேன் பதத்தைக்
கொஞ்சியரவணைத்தாள் காடி எனக்குமது
தஞ்சம் தருவாயிப்போ தேடி.

3 நீண்ட சிலுவையதில் தானே காங்கால்களை
நீட்டினயன்று வரத்தானே எங்கள்
நீசப்பாவ தோஷந்தீர மாசில்லா மரிகருவில்
நேச சுதனாய்வந்த கோனே மதுரித
நிற்மலனான கனவா னே.

---

No. 19 இராகம் (கார்த்திகா நித்ய கல்யாண - மெட்டு)

கண்ணிகள்

1 திரித்துவா யேசுநாதா திருமறை
ஞானப் போதனே
பூர்த்தியாய்ப் பூவில் நிறைந்தோனே உனைப்
பூஜித்தேனே ஞனே திரி

2 தந்தைதாய் தெய்வும் நீயாச்சே தானவன்
மகள் சேயாச்சே

நிந்தைசேர் பூவாழ் பொய்யாச்சே சேயை
நீக்கினலும் வீணச் சே திரி

3 திருமா தீனதயாளா என் தீவினை
யனைத்தும்தா னே
கூரிய முறை சொன்னேனே பக்தி
கொஞ்சமுமில்லான் நானே திரி

4 மாசில்லா மாமரி பாலா மன்றாடுவோர்க்
கனுகூலா
நேசமாமறை நூலா மரிய
சூசை ஆதி சீலா திரி

No. 20 இராகம் (தேவாதி தேவா ஜெயவல்லவா—மெட்டு)

கண்ணிகள்

1 மூவுலகோர் பணியுங்கோமானே நாளும்
முத்தர் பணிந்திறைஞ்சுஞ் சீமானே
தாவினோர்க்காதாரமும் நீ தானே நின்
தஞ்சமடைந்தேன் தற்காருங்கோனே.

2 பாவிகளுக்காய் வெள்ளைமலையில் அன்று
பாலனாய் வந்தாயே நல்லிராவில்
கூவும் முறை கேள் திருச்செவியில் பெரும்
குற்றவாளினென்றென்னைத் தள்ளாதீர் பூவில்.

3 இரக்கம் நிறைந்த நற்றந்தையரே எனை
என்றுமெமைக் கைவிடாதவரே
சுரக்கும் அருள் கடல் சிந்தையரே பேய்ச்
சோதனை சூழாதிரட்சிப்பீரே.

4 திருமரியாள் பயின்ற சுதனே நின்
சேவை தாருங் கிருபாகரனே.
மரிய—சூசை துதிக்கும் பராபரனே
மன்—குடினோர் முறை கேள்வரனே.

---

No 21 இராகம் அடாணா தாளம் ஆதி
(பொன் கோதண்டா—என்ற மெட்டு)

பல்லவி

விண்ணோர் கோவே விளங்கும் வரப்பிரசாத வி

அநுபல்லவி

மண்ணோரை மீட்டாய் மாதவர் துதி
மங்காத லங்கார சிங்கார சொரூபஞான வி

சரணம்

1 சிங்காரக் கேசராச
கன்கார்ய வாசநேச
திங்கள்பா தமணிந்த
விண்மீனணி ந்ததாயின்பால வி

2 பெண் யேவாள் தின்ற தீங்கனி
யின்வினை தீரகோர
வன்னரன் வாழ்வைவென்ற
வண்மைப்பரமா னஞானமோன வி

3 உன் பாத சேவைநாடி
டும் பேதைச் சேயைத்தேடும்
கண்பா மரிய சூசை பாடும்
பண்பாசுரங்கே ளன்பான எங்கள் வி

No 22 இராகம் தேசிக தோடி தாளம் ஏகம்

(சண்முகா ஏழை என்மேல்—என்ற மெட்டு)

பல்லவி

ஆண்டவா அடியேனென் மேல் தயவில்லையா
அன்பு இல்லையா அருள் குறையா அதை நீ சொல்லையா

அநுபல்லவி

அண்டும் அடியேன் பவம்
விண்டேன் விமல சற்குண பாரா தயவில்லையா ஆ

தொடர்

அரவுருவோடு நர கெரியலகைகையைச்
சிதை பரமனே நீதி தயவில்லையா
அடித்துக் க்ரமதால் பிடித்த யூசர்கள் மடித்துத்
தலை தனி லெழுப்பிய பரமனே தயவில்லையா

இப்புவி வாழ்வதிலே இச்சை பட்டு
இலச்சை கெட்டு இசைந்தே னுற்சாகத்திலே
ஈனமதையே வசிக்க மானமதையே
பொறுத்திட்டான்
இயம்பிடும் மரியசூசையே

முத்தொழிலே புரிந்தே திரி
மூர்த்தியெனுமய்யனே
முன்னவன் சென்னியை மிதித்த
கன்னிகையின் சேயனே
கதிதரும் சேசய்யனே
கதிதிடுமெனதிடம் தயவில்லையா ஆ

## தேவமாதா பேரில்

**No. 23** இராகம் காபி (கற்பிற்சிறந்த எந்தன் கனியே)

பல்லவி

தற்பரனைப் பயின்ற தாயே ததி நீயே
வருவாயே அருள் நேயே

அநுபல்லவி

அற்புத பராபரன் அமர்ந்த நல் வீடே
அருந்தவத்தோர் அருந்தும் அமிர்தத் தேன் கூடே
கற்பென்னும் புண்ணிய களஞ்சிய நாடே
கார்த்தருள்வாய் வனனின் தேவி
நானோ பாவி பதம் மேவி பணிந்தேனம்மா த

சரணம்

ஜென்மவிஷத்தாலடை பொன்னகர் வாசல்
திறக்கவுதித்த ஞானச் செல்வியே நேச
துன்மனக்கூளி தனைத் தொலைத்த விஸ்வாசி
தோஸ்திரம் புரிந்தேன் ததி வாரும்
அருள் தாரும் கதி சேரும் கார்த்தாளும் த
உமது தெரிசனம் என்று காண்பேனோ
உத்தம தாய் மரி உமைப்பிரிவேனோ
மத்திமச் சுதிவைத்து மகிழ்வுடன் நானே
மரியரூசை பணியுஞ்சீலி
மறை நூலி மலர்க்காலி மனுவேலி த

---

**No. 24** இராகம் தந்யாசி தாளம் சாபு

(காம சுந்தராங்கியுனது—என்ற மெட்டு)

பல்லவி

சோமனை மிதித்த காலி நின்
சுதனை வேண்டியே துதிபிது வரவேணும் சோ

மகுடங்கள்

சொந்தமென்றுன் பதமலர்
வந்தேன் இன்றுன் வரமருள் சோ

சூழமிகும் வாதொழிய
சூட்சம காட்சிதா ஆட்சியே ததியிது—சோ
தொட்டேன் உனதிருப்பதமலர்
விட்டேன் பாவவினை கட்டோடறுபட சோ

அநுபல்லவி

பானுடையணி பூரணி
பவக்கொடிது தவமினிது
நவம் மிகுந்த தவக்கனியே சோ

சரணம்

வண்டனை மிதித்த மலர்ப்பாதத்தாளே
மாதவன் சூதை மருமாளே
தெண்டம்மரிய சூதையுன் தாளே
உடல் பொருள் உயிருடன் சகலமும்
உனதடைக்கலமென்றேன் எனையாண்டருள்ததி சோ

---

No. 25 இராகம் காம்போதி தாளம் ரூபகம்
(முருகனிடமென் முறை—என்ற மெட்டு)

பல்லவி

பரமனிடமென் முறை சொல்வாய் மரியே பர

மகுடங்கள்

1 பரிவாகவே அறவோர் குழு
திறமாய்க்காங் குவித்தடிபணி பர

2 பற்றி உனை நற்றியவொரு
பக்தன் சொல்லை பரிவுடனிதுததி பா

3 பழவினையால்கொண்ட கொடும்வினையதுபட
பற்பல விற்பண அற்புதம் புரியவே பா

4 பற்றுத் எனை பற்பல துயர்
சற்றினுமதைச் சகித்திடக்கூடுதில்லை பா

அநுபல்லவி

பாவியவுலகோர் புகழுடன்
பணிபுரி திருவள்ன்
பெருகட்பைப்பெருபவள் புதல்வனும்
பக்தர் போற்றும் பரப்பிரமநிதி
பரமனும் யேசுவென்னும் பா

சரணம்

தாயற்ற பிள்ளையாய் வாய்விட்டலறினேன்
தாபரித்துத்தவப் புண்ணியஞ்சாரவும் சாரவும்
துயருற்ற என் மனத் துக்கமகற்றவும்
தாது நீயே இனி வேறில்லை
தொண்டர் மரிய சூசை சதா
துதித்தேன் மதித்தேன்
முப்பொழுதுங் கன்னிகையான்
அற்புத மரியே வுன்
கற்பகமென் வெழுந்த சற்பிறசாதனென்னும் பா

---

No. 26 இராகம் அமிர்தவாகினி தாளம் ஆதி
(ஸ்ரீராம பாதமா—என்ற மெட்டு)

பல்லவி

தாயே கிர்பாகரி தமியோரை யாதரி
தாவித னின் கோத்ரி தா

அநுபல்லவி

தானவன் வாசமே தனிமுதல் நேசமே
தந்தருளும் வுந்தனுசீர் மைந்தருக்கென்னாளுமே தா

சரணம்

தேவுலகோர் போற்றும் ஞானத் தீனதயாபரி
தின்மைகளைத்தாநெழியும் நன்மைமிகும்மாமரி
சேவித்தேன் பூரணி ஜென்ம நிவாரணி
சிறியேன் மரிய சூசை
செப்பும் புக ழாரணி தா

No 27 இராகம் கமாஸ் தாளம் ஆதி

(ஆலோலமென்று கூவினாள்—என்ற மெட்டு)

பல்லவி

அமலோற்பவியென்றே கூவினாள்—மலைச்சார்பதில்
அமலோற்பவியென்றே கூவினாள்—குகைமீதேறி அ

அநுபல்லவி

நிமலி தினதடி ரோஜாமல ரணிமகிழ்வொடு
தோன்றினாள் மாதவன் வளன்பாரி
மக்களெமக்காய் மகனை மன்றாடும்மரி அ

சரணம்

காமனைதக்குவித்த நற்சீராய் கன்னிகைபெர்நதக்தாள் முன்
களிப்புடன் பவளவாய் திறந்தாள்
காசினியின் மக்கள் பாவம் கழுவிடத்தகியிது
தனதவம் பண்ணிட உலகோர்க்குரையென்று அ

2 உதித்த கிரணனே உடையணிசிரமதில்
உடுக்களை முடியாகப் பதித்தனள்
உன்னத ஒளியுடன் குகைமீதில் நின்று
உத்தமியானகன்னிகைஞான மோதினள்திருமொழியன்று அ
3 பார்புகழ் பிரான்ஞ்சில்லூர்து மாமலைதன்னிலென்றும்
மாதவம் புரிந்திடுந் தாயே
மரிய சூசை தமிழ்க்கருள் வாயே அ

---

No. 28 இராகம் (சிங்கார மாமயிலாடுது—என்ற மெட்டு)

கண்ணிகள்

1 சிங்கார மாமலை மீதினில் தங்கும்மாமரியுனை நாடினேன்
சேவை பெறக் கூவினேனே
சிந்தித்தேனுனை வந்துன்னருள்புரி
சென்மவினை நிராகரியே சி
2 காட்டுரோஜா மல்லைமிதி மேட்டில்நின்றேயருள்புரிந்திடு
காரணியே பரி பூரணியே
கஞ்சப்பதமலர் கெஞ்சித்துதிப்பேன்
கண்மணியே பெண்மணியே சி
3 பெர்நதத்தாளெனுஞ்சிறுமிமுன் அறுமூன்றுதினந்தந்தாய்
காக்ஷியே
அம்பிகையே நம்பினேனே
அத்தன் பிதாவிடம் நித்தம் மனுப்பேசி
ஆதரியே நீ கெதியே.

---

## அர்ச் : சூசையப்பர் பேரில்

No. 29 இராகம் திருப்புகழ்

தனனதன தானதந்த தனனதன தானதந்த
தனனதன தானதந்த—தனதான

1 திருவரத்தினுலுதித்து திருமரியாளை மணந்து
தேவுலகோனை வளர்த்த தந்தையே
வரமிகுந்தவுந்தன் பாதம் வந்தடியுமெங்களிதம்
வறுமைப்பிணி தீர்க்க அருள் தந்தையே தி

2 கடிமலர்க்கொடியுடையோய் கரமதில் சுதனையேந்தி
கார்த்தருள வந்தருள் நின் சேயனை
படியுடல் கடியலகை படுத்தும்மிடி தன்னை வென்று
பரகதியில் வீற்றிலங்கும் பெரியாரே.

3 என் மரணவேளைதன்னில் நன்மரணமேயடைய
ஏசு—நாதனைமன்றாடுங் கிருபாகனே
உந்தனருளை மன்றாடும் மைந்தனும் மரியசூசை
செந்தமிழ்க்கிரங்கியருள் யோகனே.

---

## அர்ச்: சவேரியார் பேரில்

No. 30. இராகம் (கற்பிற்சிறந்த எந்தன் கனியே—மெட்டு)

பல்லவி

பிரான்சீஸ்க்கென்னும் சவேரியாரே கதிநீரே
அருள்வீரே பெரியாரே

அநுபல்லவி

பாவ அந்தகாரத்தால் பாவியவுலகின்
பாசமறுத்துயினைப் பேயதின் வலையின்
நாசமடையா மக்கள் நல்வழி புகவே
நாடியித்தேசம் வந்த தாதா நேசபோதா
வாசநாதா வரந்தாரும் பி

சரணம்

அல்லும் பகலும் தேவ அமலனின் மொழியை
அஞ்ஞான நாடுகளில் அயராது விதைத்து

சொல்லொண்ணு மாதவம் பொழியச்செய்தவனே
போற்றிப்பணிந்தேன் பதம் நானே
பெருங்கோனே வரத்தானே அருந்தேனே.

2 அலைகடல் புயலதை அமர்த்திய வரமே
ஆண்டருள் யிந்நகரை அமலசற்குணமே
தாள்பணியும்மரிய சூசைக்குன்பதமே
தந்தாதரிப்பதுந்தன் பாரம் இந்த நேரம்
அந்தகாரம் அகற்றுவீரே.

---

## அர்ச். அந்தோனியார் பேரில்

No. 31 இராகம் (சோமசேகரனருளும் பாலா வேலா)

கண்ணிகள்

1 எந்தனைக்கண் பாரந்தோனி நாதா நாதா—ஏக
இரக்ஷகனிடமெமையே சேரும் நீதா
விந்தைசெறி மாமறையின் போதா போதா—யேசு
விமலனைக்கரமணிந்த மேதா தாதா எந்

2 பதுவைப்பதி தான்வளரும் சீலா சீலா—வெகு
புதுமை வரங்கள் நிறைந்த கோலாகலா
சதிசெய் மூவாசையைவென்ற மேலா மேலா—புகள்
சாற்றினேமெமைக்கண்பாரும் வேலா சீலா எந்

3 தீராத மாபிணியைத்தீர்க்குங்கோனே—எந்தன்
தீவினையகற்றுங்கனவானே கோனே
போராடுதே நரகோருப்கள் தானே—அதைப்
போக்கியருள்வாய் கனசீமானே வானே எந்

4 இந்த நகரந்தன்னைக் கண்பாரும் பாரும்—பரன்
இணையடி பதத்திலெமைச் சேரும் சேரும்
சொந்தமாயுனதுவரந் தாரும் தாரும்—மரிய
சூசைக்குன்னுசீர் தன்னையே கூறும் கூறும் எந்

## அர்ச். செபஸ்தியார் பேரில்

No. 32 இராகம் (கன்னி மரி மாதுபெற்ற—என்ற மெட்டு)

பல்லவி

அர்ச்சய செபஸ்தியாரே அடியோர்க்கருள் கூறே

அநுபல்லவி

அடியோர்க்கருள் கூறே அலகைகளின் ஏறே அர்

சரணம்

1 நிச்சயமுமதடியில் நேர்ச்சி செய்தேன் நானே
நேர்ச்சி செய்தேன் நானே சாக்ஷிபளி கோனே அர்

2 துர்ச்சனன் சோமைத்தலைவன் தொடுத்த பாணமதை
தொடுத்த பாணமதை ஜெயித்தநல் தீரனே அர்

3 கடியலகை சரீரம் கடும்போரை வென்றவா
கடும்போரை வென்றவா கருணை நிறைந்தவா அர்

4 பஞ்சம் படைநோய் பிணிகள் பரவாதருளய்யா
பரவாதருளய்யா பாதுகார்த்தாள் மெய்யா அர்

5 பாலன் மரியசூசை பாடினேன் பாமாலை
பாடினேன் பாமாலை சூடுவேனின் தாளை அர்

## மாதா பேரில்

No. 33 இராகம் (சேமஞ்சொற்காசமே—என்ற மெட்டு)

கண்ணிகள்

சோமன்மிதி பதமே நாளுந்தருவாய் சதமே
நேயமுடன் தினமே நாமந்தொழுவாய் மனமே
எத்திசையும் புகள் சத்தியமறை வேதன்
பக்தர் தினம் பணிந்திடும் போதன்
பறமுறை நார்பணி கருணாகரி
பா மூக்கியமாம்
தினவாமருள் மாமரிசீர் மூக்கியமாம்
தினசயாளப்பரன் வாக்யமே
சேயன் மரியசூசை பாக்கியமே

முற்றிற்று